இருசக்கர வாகனம் மீது கார் மோதல் மாமியார், மருமகள் உயிரிழப்பு

புதுக்கோட்டை, ஜூலை 15: புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அம்மாசத்திரம் அருகே புதன்கிழமை இருசக்கர வாகனம் மீது கார் மோதியதில் மாமியார், மருமகள் உயிரிழந்தனர்.

விபத்தில் சேதமடைந்த கார்.

கீரனூர் அருகே உள்ள அம்மாசத்திரம் ஊராட்சிக்குள்பட்ட வெள்ளாளப்பட்டியைச் சேர்ந்தவர் சின்னக்கண்ணு மனைவி வீராயி (70). இவர், தனது மருமகள் வேம்பையன் மனைவி சாந்தியுடன் (25), புதன்கிழமை காலை இரு சக்கர வாகனத்தில் அம்மாசத்திரம் ஊராட்சி அலுவலகத்துக்குச் சென்றுவிட்டு, வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர் இருசக்கர வாகனத்தை சாந்தி ஓட்டிவந்தார்.

இவர்கள் திருச்சி- காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் அம்மாசத்திரம் அருகே கோப்பளிக்காடு பிரிவு சாலையை கடக்க முயன்றனர். அப்போது, புதுக்கோட்டை காவேரி நகரில் இருந்து திருச்சி நோக்கிச் சென்ற கார், இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டு, திருச்சியில் இருந்து புதுக்கோட்டை நோக்கிச் சென்ற மற்றொரு காரின் மீதும் மோதியது.இந்த விபத்தில் இரண்டு கார்களுக்கும் நடுவில் சிக்கிய இருசக்கர வாகனத்தில் இருந்த வீராயி, சாந்தி ஆகிய இருவரும் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், திருச்சி நோக்கிச் சென்ற காரில் பயணித்த அடைக்கலராஜ், இவரது மனைவி சரண்யா இருவரும் காயமடைந்தனர். இவர்களை அப்பகுதியினர் மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தகவலறிந்து வந்த கீரனூர் காவல் நிலைய போலீஸார், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு உடற்கூறாய்வுக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இதுதொடர்பாக போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த மனைவி கொலை: கணவர் கைது

திருச்சி, ஜூலை 15: திருச்சி உறையூரில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மனைவியை குத்திக் கொன்ற கணவரை போலீஸார் புதன்கிழமை கைது செய்தனர்.

கவிதா, சம்பத்குமார்.

திருச்சி தீரன் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சம்பத்குமார் (எ) மூர்த்தி (40). இவரது மனைவி கவிதா (36). இவர்களுக்கு ஒரு மகன், மகள் உள்ளனர்.

சந்தேகம் காரணமாக தம்பதிக்கிடையே அடிக்கடி தகராறு நடைபெறுமாம். திருச்சி மிளகுப்பாறை பகுதி பீடா கடை ஊழியரான சந்தோஷ்குமாருக்கு செவ்வாய்க்கிழமை கவிதா சாப்பாடு கொண்டு வரவில்லையாம். இதனால் ஆத்திரமடைந்த சம்பத்குமார் வீட்டுக்குச் சென்று, கவிதாவிடம் தகராறில் ஈடுபட்டு, இரும்புக் கம்பியால் அவரைத் தாக்கினார். இதையடுத்து வெளியில் சென்ற அவர், தனது மாமனார்-மாமியாருக்கு கைப்பேசி மூலம் தகவல் தெரிவித்தார். இதையடுத்துச் சென்ற உறவினர்கள், கவிதாவை சீனிவாச நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். இதையறிந்த கணவர் சம்பத்குமார், அந்த மருத்துவமனைக்கு நள்ளிரவில் சென்று கவிதாவைப் பார்த்து இன்னும் நீ சாகவில்லையா எனக் கேட்டு, கத்தியால் சரமாரியாக அவரைக் குத்திவிட்டு தப்பிவிட்டார். இதில் படுகாயமடைந்த கவிதாவை திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இதுகுறித்த புகாரின்பேரில் உறையூர் போலீஸார் வழக்குப் பதிந்து சம்பத்குமாரை புதன்கிழமை கைது செய்து விசாரிக்கின்றனர்.

தனியார் வங்கி ஏடிஎம் இயந்திரத்தை உடைத்து ரூ. 7 லட்சம் கொள்ளை

ஆற்காடு, ஜூலை 15: ஆற்காடு அருகே தனியார் வங்கி ஏடிஎம் இயந்திரத்தை உடைத்து ரூ.7 லட்சத்தை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

ஆற்காடு-செய்யாறு சாலையில் உள்ள கலவை தனியார் கல்லூரி நுழைவு வாயில் அருகே ஏடிஎம் மையம் உள்ளது. இரவு காவலாளி இல்லாத நிலையில் மர்ம நபர்கள் திங்கள்கிழமை நள்ளிரவில் உள்ளே சென்று வெல்டிங் இயந்திரம் மூலம் தானியங்கி இயந்திரத்தை உடைத்து அதில் இருந்த ரூ.7 லட்சம் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அவர்கள் அங்கிருந்த இரும்பு கதவை மூடிவிட்டு சென்றுவிட்டதாக தெரிகிறது. இயந்திரத்தில் பணம் இல்லாதால் மூடப்பட்டுள்ளது என்று கருதிய நிலையில், இது குறித்து தகவல் அறிந்த கலவை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், சம்பவ இடத்தை வேலூர் சரக டிஐஜி மகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிபின், ராணிப்பேட்டை துணை கண்காணிப்பாளர் கனகராஜ் ஆகியோர் ஆய்வு செய்து விசாரித்தனர். கைரேகை நிபுணர்கள் சென்று தடயங்களைப் பதிவு செய்தனர். கண்காணிப்பு கேமராக்களின் பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும் 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு கொள்ளையர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

காவிரியில் தண்ணீர் திறக்க வலியுறுத்தி கர்நாடகம் நோக்கிச் சென்ற 100-க்கும் மேற்பட்ட தமிழக விவசாயிகள் கைது

ஒகூரில் இருந்து கர்நாடக மாநிலம், மேக்கேதாட்டை நோக்கி சென்ற விவசாயிகளை கைது செய்த போலீஸார்.

ஒகூர், ஜூலை 15: காவிரியில் தண்ணீர் திறக்கவும், மேக்கேதாட்டில் அணை கட்டக் கூடாது எனவும் வலியுறுத்தி கர்நாடக மாநிலம், மேக்கேதாட்டை நோக்கி நடைப் பயணம் மேற்கொண்ட தமிழக விவசாயிகள் 100-க்கும் மேற்பட்டோரை போலீஸார் புதன்கிழமை கைது செய்தனர்.

காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து, தமிழகத்தைச் சேர்ந்த உழவர்பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம், இளம் விவசாயிகள் சங்கம், விவசாய முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல்வேறு விவசாய அமைப்புகள் தொடர் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

அதன்பேரில், காவிரியை நீர் ஆதாரமாகக் கொண்டுள்ள தமிழகத்தின் 22 மாவட்டங்களைச் சேர்ந்த பாசன விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் என நூற்றுக்கணக்கானோர் ஒகூர் மூக்கண்டப்பள்ளியில் புதன்கிழமை திரண்டனர்.

உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேலுசாமி தலைமையில், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க நிறுவனர் அய்யாக்கண்ணு முன்னிலையில் தொடங்கிய பேரணி, சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை வழியாக கர்நாடக மாநிலத்துக்குள் நுழைய சென்றது.

ஒகூர் இ.எஸ்.ஐ. உள்வட்டச் சாலை சந்திப்புப் பகுதியை பேரணி அடைந்தபோது, அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு அரண் அமைத்து விவசாயிகளைத் தடுத்து நிறுத்தினர்.

இதனால் இருதரப்புக்கும் இடையே கடுமையான வாக்குவாதமும், தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. மாநில எல்லையைத் தாண்ட போலீஸார் அனுமதி மறுத்ததால், ஆத்திரமடைந்த விவசாயிகள் சாலையில் அமர்ந்து கர்நாடக அரசு மற்றும் மத்திய அரசுக்கு எதிராககண்டன முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து, சாலை மறியலில் ஈடுபட்ட அய்யாக்கண்ணு, வேலுசாமி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகளை போலீஸார் கைது செய்து தனியார் மண்டபங்களில் தங்கவைத்தனர்.

இதுகுறித்து தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க நிறுவனர் அய்யாக்கண்ணு செய்தியாளர்களிடம் கூறுகையில், உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கர்நாடகம் மாதந்தோறும் தண்ணீர் திறந்துவிட்டால், தமிழகத்தின் 28 மாவட்டங்களின் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும், விவசாயிகளும் குறுவை,சம்பா,கோடைசாகுபடியைச் செய்ய முடியும். ஆனால், டெல்டா பகுதியை வறட்சியாக்கி, அங்கிருந்து மீத்தேன், பெட்ரோல், டீசல் எடுக்க மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடக அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளோம். மேலும், விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வேலுசாமி கூறுகையில், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் தண்ணீர் தர மறுக்கிறது. இதுகுறித்து தமிழக அரசிடம் முறையிட்டால் மெத்தனமாக இருக்கிறது. விவசாயிகளின் கோரிக்கையை தற்போதைய அரசு முற்றிலும்மறந்துவிட்டது. அதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், மாநில எல்லையை தாண்டிச் சென்று தண்ணீரைத் திறக்க வேண்டும் என்ற நோக்கில் நாங்கள் வந்தோம். ஆனால், தமிழக அரசு காவல் துறையை பயன்படுத்தி விவசாயிகளின் குரல்வளையை நசுக்குகிறது.

காவிரியிலிருந்து மணல் அள்ள குவாரிகளை திறக்க அரசு முயன்றால், விவசாயிகள் சங்கம் அதற்கு பூட்டுப்போடும் விழாவை நடத்தும் என்றார்.

தமிழக சட்டப் பேரவை முன் சத்தியாகிரகப் போராட்டம்

வாட்டாள் நாகராஜ்

ஒகூர், ஜூலை 15: தமிழக சட்டப் பேரவை முன் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப் போவதாக, கன்னட செலுவளி மாநிலத் தலைவர் வாட்டாள் நாகராஜ் தெரிவித்தார்.

ஒகூர் அருகே மாநில எல்லையான அத்திப் பள்ளியில் கன்னட கூட்டமைப்புகள் சார்பில், மேக்கேதாட்டுவில் அணை கட்ட வேண்டும், பெங்களூரு மாநகருக்கு குடிநீர் ஆதாரத்தை பெருக்க வேண்டும் என வலியுறுத்தி லகன்னட அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், கன்னட செலுவளி மாநிலத் தலைவர் வாட்டாள் நாகராஜ், கன்னட ஜாக்ருதி வேதிகே மாநிலத் தலைவர் மஞ்சுநாத் தேவ், கன்னட ரக்ஷண வேதிகே மாநிலத் தலைவர் நாராயண செட்டி ஆகியோர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

இதில், மேக்கேதாட்டு அணை திட்டத்தை கர்நாடக அரசு உடனடியாக தொடங்க வலியுறுத்தியும், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தமிழக அரசைக் கண்டித்தும் கர்நாடகத்தில் விரைவில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படும் என கன்னட கூட்டமைப்பு மற்றும் கன்னட அமைப்புகள் அறிவித்தன.

ஆர்ப்பாட்டத்துக்கு பிறகு வாட்டாள் நாகராஜ் செய்தியாளர்களிடம் கூறியது:

மேக்கேதாட்டு அணை திட்டம் என்பது பெங்களூரு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் குடிநீர்தேவையை பூர்த்தி செய்வதற்கான திட்டம். இத்திட்டத்துக்கு தமிழக அரசு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

ஏற்கெனவேபோதிய பருவமழை இல்லாததால் கே.ஆர்.எஸ்., கபினி, ஹேமாவதி உள்ளிட்ட கர்நாடகத்தின் முக்கிய அணைகளில் தண்ணீர் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வற்புறுத்துவது கன்னடர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்த விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண உச்ச நீதிமன்றமே வலியுறுத்தியுள்ளது.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் இந்த விவகாரத்தில் அரசியல் செய்யாமல், கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வுகாண வேண்டும். இல்லையெனில், கன்னட அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் தமிழக சட்டப் பேரவைக்கு முன் மாபெரும் சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்துவோம்.

ஆட்சியில் இல்லாதபோது மேக்கேதாட்டு திட்டத்துக்காக பாதயாத்திரை நடத்திய டி.கே. சிவகுமார், தற்போது அதிகாரத்தில் இருந்தும் திட்டத்தை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தால், புதன்கிழமை காலைமுதல் மதியம் ஒருமணிவரை தமிழக பேருந்துகள் பெங்களூருக்கு அனுப்பப்படாமல் ஒகூரிலேயே நிறுத்தி வைக்கப்பட்டன.

மணல் குவாரிகளைத் திறக்க விவசாயிகள் கடும் எதிர்ப்பு

திருச்சி, ஜூலை 15: தமிழத்தில் மூடப்பட்டுள்ள மணல் குவாரிகளை மீண்டும் திறக்க தவெக அரசு ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என விவசாயிகள் சங்கத்தினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் அய்யாக்கண்ணு: ஆற்று மணலைக் கட்டுப்பாடின்றி தொடர்ந்து அள்ளுவதால் பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புகள் உருவாகின்றன.

ஆற்றின் இயற்கையான ஓட்டம் பாதிக்கப்படுகிறது; நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும்; ஆற்றங்கரைகள் அரிப்பு ஏற்பட்டு விவசாய நிலங்கள் சேதமடையும்; ஆற்றங்கரை மற்றும் கட்டமைப்புகளின் அடித்தளம் பலவீனம் அடையும்.

வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஏற்கெனவே கண்மூடித்தனமாக, மணல் அள்ளியதால் ஏற்பட்ட வறட்சியால் காவிரி ஆற்றங்கரைகளில் இருந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்களும், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனை மரங்களும் எங்கள் கண்முன்னே அழிந்தன. மீண்டும் மணல் அள்ளினால் எதிர்காலச் சந்ததியினருக்கான இயற்கை வளம் இல்லாமல் போகும்.

எந்த அரசாக இருந்தாலும் மணல் அள்ளும் முயற்சியை மேற்கொண்டால் தொடர்போராட்டங்களை நடத்துவோம்.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்க தலைவர் பூ. விஸ்வநாதன்: விவசாயிகள் மீது துளியும் அக்கறையின்றி தமிழக முதல்வர் செயல்படுகிறார். ஏற்கெனவே, மேட்டூர் அணை திறக்காததால் குறுவைபொய்த்துவிட்டது. சம்பா சாகுபடி நடைபெறுமா எனத் தெரியவில்லை. இந்நிலையில் மணல் குவாரிகள் மீண்டும் திறக்கப்பட்டால், போர்வெல் மூலம் நடைபெறும் சாகுபடியும் பாதிக்கப்படும்; நிலத்தடி நீர் அதலபாதாளத்துக்கு சென்றுவிடும்; குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும்.

தேர்தல் வாக்குறுதிப்படி பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாததால் விவசாயிகள் தமிழக அரசு மீது கோபத்தில் உள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் மணல் குவாரிகளைத் திறந்தால் பொதுமக்கள் கோபம் அதிகரிக்கும். விவசாயிகள் போராட்டம் வெடிக்கும். தவெகவினர் பணம் சம்பாதிக்கவே மீண்டும் மணல் குவாரிகளை திறக்க இருப்பதாகச் சந்தேகம் எழுகிறது. டெல்டாவை பாலைவனமாக்கும் இந்த முடிவை தமிழக முதல்வர் ஜோசப் விஜய் உடனடியாகக் கைவிட வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொருளாளர் அயிலை சிவசூரியன்: தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்பட்டு, அமலாக்கத் துறை சோதனையைத் தொடர்ந்து மூடப்பட்ட மணல் குவாரிகளில் 10 முதல் 12 குவாரிகளை மீண்டும் திறக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. சுற்றுச்சூழலை சீர்குலைப்பது, மணல் கொள்ளையை ஊக்குவிப்பது என இரட்டைத் தீமைகளை தரும் மணல் குவாரிகளைத் திறக்க அரசு முடிவு செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

மணல் எடுக்கப்பட்டால் காவிரி, கொள்ளிடம், வெள்ளாறு உள்ளிட்ட ஆறுகள் வறண்டு, ஒட்டுமொத்த காவிரி பாசன மாவட்டங்களும் பாலைவனமாகிவிடும். இந்த சூழலியல் சீரழிவைச் சரிசெய்யவே முடியாது.

காவிரி -டெல்டா பாசன விவசாயிகள் சங்க துணைச் செயலர் கவுண்டம்பட்டி சுப்பிரமணி: கட்டுமான மணலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைப் போக்க காவிரிப் பாசன மாவட்டங்களில் மணல் குவாரிகளை திறப்பதுதான் ஒரே வாய்ப்பு அல்ல. வெளிநாடுகளில் இருந்து மணல் இறக்குமதி செய்வது உள்ளிட்ட ஏராளமான மாற்று வழிகள் உள்ளன.காவிரிப் பாசன மாவட்டங்களை பாதுகாப்பதற்கு பதிலாக அதை பாலைவனமாக்குவதில் தமிழக அரசின் செயல்பாடுகள் இருந்துவிடக் கூடாது.

எனவே, 12 மணல் குவாரிகளைத் திறக்கும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். அதுமட்டுமின்றி, காவிரி, கொள்ளிடம் உள்ளிட்ட ஆறுகளில் குறைந்தது 5 கி.மீட்டருக்கு ஓரிடத்தில் தடுப்பணைகளைக் கட்டவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

CUB

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

கடன் மீட்பு மற்றும் மேலாண்மை துறை

நிர்வாக அலுவலகம் : எண். 243, காந்தி நகர், கும்பகோணம் - 612 001.
மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

தங்க நகை பிணை கடன் மீள் நினைவூட்டல் அறிவிப்பு மற்றும் பொது ஏலம் தொடர்பாக

தங்க நகை பிணை கடன் -மீள்நினைவூட்டல் அறிவிப்பு மற்றும் பொது ஏலம் தொடர்பாக

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவெனில், வங்கியின் சார்பில் தங்க நகை அடமான கடன் பெற்றுள்ள கடன்பெறுநர்கள், முன்பே அனுப்பப்பட்ட மீள்நினைவூட்டல் அறிவிப்புகளுக்குப் பிறகும், தங்களுடைய கணக்குகளை ஒழுங்குபடுத்தவோ அல்லது கடன் தொகை, வட்டி மற்றும் பிற நிலுவைத் தொகைகளை ஒப்புக்கொண்ட நிலுவைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தங்களது நிலுவைத் தொகைகளை முழுமையாக செலுத்தத் தவறியுள்ளனர். மேலும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டல்களும் பெறப்படாமல் திரும்பி வந்துள்ளது.

வரிசை எண்	நகைக்கடன் கணக்கு எண் & கடன் பெற்ற தேதி	கடனாளரின் பெயர் மற்றும் முகவரி	நகையின் மொத்த எடை	நகைகளின் விவரம்	KDM / NON KDM	பொது ஏலம் நடைபெறும் வங்கிக் கிளையின் பெயர் & முகவரி
1	502112030 134693 & 23-05-2023	ஜோஸ்பின் மலர்ஜன் No.3 K.L.K.5 நகர் புதுக்கோட்டை தாலுக்கா புதுக்கோட்டை புதுக்கோட்டை	26.7	CHAIN - 1 RINGS - 2	KDM 916	புதுக்கோட்டை கிளை 9954/3A28, மாரதாணடபுரம், 3வது தெரு, ஆலவந்தபுரம் சாலை, புதுக்கோட்டை, தமிழ்நாடு, 622001

எனவே மேற்கண்ட கடன்பெறுநர்கள், தங்களது கடன் கணக்குகளின் முழு நிலுவைத் தொகையையும் உடனடியாகச் செலுத்தி, ஏலம் நடைபெறுவதற்கு முன்பாக நகைகளை மீட்குமாறு இதன் மூலம் இறுதியாக அறிவிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில், வங்கியின் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள், வங்கியின் மீது குறிப்பிடப்பட்டுள்ள கிளை வளாகத்தில் 18.08.2026 அன்று 01.00 மணிக்கு பொதுவெளியில் முன்னிலையில் பொது ஏலத்தில் விற்பனையாகும்.

கடன் பெற்றவர்கள் இறந்தவராக இருப்பின் இந்தப்பட்ட நினைவூட்டல் மற்றும் ஏல அறிவிப்பு ஆனது அவரது சட்டபூர்வ வாரிசுகள் / செயல்படுத்துநர்கள் / நிர்வாகிகள்/ பிற சட்ட பிரதிநிதிகள் ஆகியோருக்கு பொருந்தக்கூடியதாக கட்டுப்படுத்தும் வகையிலும் அமையக் என்பதை மேலும் அறிவிக்கப்படுகிறது. அதேபோல் முழு நிலுவைத் தொகையை செலுத்தாமல் பகுதி தொகை மட்டும் செலுத்தப்பட்டாலும், அந்தக்கடன்களை ஏலத்தில் விடவிலக்கு முழுமை பெறமாட்டாது.

மூன் பொறியப்பட்ட ஏலத்தில் பொதுமக்கள் கலந்து கொள்ளும் வகையில் இவ்வறிப்பு வெளியிடப்படுகிறது. நகை கடன் ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் பிற தகவல்களை தொடர்பான விவரங்களை சம்பந்தப்பட்ட கிளையையோ அல்லது வெறுக்க கொள்ளலாம்.

ஏலத்திற்கு உட்பட்ட நகைக் நகைகளின் விவரம், ஒவ்வொரு கடன் கணக்கிற்கும் விதிக்கப்படும் பிற நிபந்தனைகள், மற்றும் ஏல விதிமுறைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஏலத்தில் பங்கேற்க விரும்புபவர்கள், வங்கி நிர்ணயித்த விதிமுறைகளின்படி முன்பணம் / E M D மற்றும் தேவையான அடையாள ஆவணங்களுடன் வருகை தர வேண்டும். வங்கி, காரணம் கூறாமல் ஏலத்தைக் கைவிடுவதற்கும், ஒத்திவைப்பதற்கும், அல்லது விதிமுறைகளை மாற்றுவதற்கும் உரிமை கொண்டுள்ளது. மேலும், ஒவ்வொரு கடன் கணக்கிற்கும் தொடர்பான தங்க நகைகளின் அளவு, தரம், எடை மற்றும் சந்தை மதிப்பு ஆகியவை ஏலத்தின்போது வங்கி பதிவேடுகள் மற்றும் நகை முன்னேற்பாடு குழுவால் நிர்ணயிக்கப்படும் விலை (Reserve Price) நிர்ணயிக்கப்படும்.

குறிப்பு : 1. ஏலதாரர்கள் தங்களின் பான் (PAN) விவரங்களை கொண்டு வந்து கேஒய்சி (KYC) விதிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும். 2. வெற்றி பெற்ற ஏலதாரர் நிதானம் ஏலத் தொகையை உடனடியாகச் செலுத்த வேண்டும்; இல்லையெனில், அவர்களின் முன்பணம் பறிமுதல் செய்யப்படும்.

இடம்: புதுக்கோட்டை, நாள்: 16.07.2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்பம்

பதிவு அலுவலகம்: 149,T.S.R. பெரியத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு612001. CIN-L65110TN1904PLC001287
போன்: 0435-2402322, பேக்ஸ்: 0435-2431746 . இணையதளம்www.cityunionbank.com

'புல்லிங்கோ' பாணி மாணவர்களுக்கு வகுப்பறையிலேயே முடி திருத்தம்!

கடலூர், ஜூலை 15: கடலூரில் அரசுப் பள்ளி நிர்வாகம் எச்சரித்தும் 'புல்லிங்கோ' பாணி சிகை அலங்காரத்தை மாற்றிக் கொள்ளாத மாணவர்களுக்கு பள்ளி வகுப்பறையிலேயே புதன்கிழமை முடி திருத்தம் செய்யப்பட்டது.

தமிழக அரசும், பள்ளிக் கல்வித் துறையும் பள்ளி மாணவர்கள் ஒழுக்கம், சீருடை விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக, பள்ளிகளில் குறிப்பிட்ட வகை கயிறுகள் அணிவது, ஒழுங்கற்ற சிகை அலங்காரம் வைத்திருப்பது உள்ளிட்டவற்றை தவிர்க்க வேண்டும் என்று தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றன.

கடலூரில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விதிமுறைகளுக்கு ஏற்ப மாணவர்களுக்கு புதன்கிழமை முடி திருத்தம் செய்த தொழிலாளர்கள்.

இந்நிலையில், கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தின் பின்புறத்தில் செயல்பட்டு வரும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சில மாணவர்கள் பள்ளி விதிமுறைகளுக்கு முரணாக நீளமான மற்றும் 'புல்லிங்கோ' பாணி சிகை அலங்காரத்துடன் பள்ளிக்கு வந்த நிலையில், அவர்களுக்கு ஆசிரியர்கள் முடி திருத்தம்செய்துகொள்ளுமாறு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்தனர்.

பலமுறை அறிவுறுத்தியும் மாணவர்கள் சிகை அலங்காரத்தை மாற்றாததால், பள்ளி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது. அதன்படி, பள்ளித் தலைமையாசிரியை செந்தாமரைச்செல்வி தலைமையில், நெடுஞ்சாலை ரோந்து காவல் உதவி ஆய்வாளர் திருமாவளவன் முன்னிலையில், முடி திருத்தும் தொழிலாளர்கள் மூலம் ஏராளமான மாணவர்களின் முடி பள்ளி விதிமுறைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டது.மாணவர்கள் ஒழுக்கம், சீருடை நடைமுறை மற்றும் பள்ளி கட்டுப்பாடுகளைப் பின்பற்றும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பள்ளி நிர்வாகம் தெரிவித்தது.

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
இந்தியாவின் பன்னாட்டு வங்கி

பேங்க் ஆப் பரோடா

கரூர் மெயின் கிளை : 5வது குறுக்கு, செங்குந்தபுரம், கரூர் – 639 002.
போன் : 91210 73135, 91760 60206. மின்னஞ்சல் : KARUR@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி கவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் /அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	கவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
கடன்தாரர் : M/s. ஹெம்ப் ஃபேப்ஸ், பிரதிநி